ஸ்ரீ:
ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

# 1. வானாமாமலை ராமானுஜ ஜீயர் ஸ்வாமி
# (பொன்னடிக்கால் ஜீயர் ஸ்வாமி)

## தனியன்

ரம்யஜாமாத்ரு யோகீ3ந்த்3ர பாத3ரேக2ாமயம் ஸதா3 |
த3த்3ாயத்3த4ாத்ம ஸத்3த்3ாதி3ம் ராமாநுஜ முநிம் ப4ஜே ||

## வாழி திருநாமம்

திருவிருந்த மலர்த் தாள்கள் வாழியே
        சிறந்த செந்துவராடையும் வாழியே
தருவிருந்தகை முக்கோலும் வாழியே
        தடம் புயத்தினில் சங்காழி வாழியே
மருவு கொண்டல் மணவாள யோகியை
        வாழ்த்தி வாய்ந்தருள் வாய் மலர் வாழியே
கருணை மேவு இராமானுச முனி
        கனக மௌலி கலந்தூழி வாழியே

அடியவர் தம் துயர் அனைத்தும் அறுத்தருள்வோன் வாழியே
        அணிபொழில் சிரீவரமங்கை அவதரித்தோன் வாழியே
கடிபொழில் சூழ் பூதூர் மன் கழல் பணிந்தோன் வாழியே
        கருத்தை அடர் புலன்கள் ஐந்தும் கடிந்து விட்டோன் வாழியே
வடமொழி தென்மொழி மறைகள் வகுத்துரைப்போன் வாழியே
        மணவாள மாமுனியை வாழ்த்துமவன் வாழியே
இடருததி முழுகும் எனை எடுத்தளிப்போன் வாழியே
        என் அப்பன் இராமானுச முனிவன் வாழியே

பணவாளரவில் துயில் அரங்கேசர் பதம் பணியும்
மணவாள மாமுனி மாமலர்த் தாள்களை வாழ்த்து நல்ல
குணவாளன் எந்தை இராமானுச முனி கோதில் பதம்
தணவா நிதி நமக்கு என்றென்றும் நாடோறும் சாற்று நெஞ்சே

## சீர்

வாழி இராமானுச முனிவன் மாமலர்த் தாள்
வாழியவன் கருணை மா நோக்கம் - வாழியே
எந்தை மணவாள முனி இன்னருளால் மாறன் இசைச்
செந்தமிழைத் தேர்ந்துரைக்கும் சீர்

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்